உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருபாதம்.

சிவஞானபோதம்

உண்மையதிகாரம்

சாதனவியல்.

ஏழாஞ்சூத்திரம்.

தருமபுரம் ஆதீனம்.

ஸ்ரீ மெய்கண்டான்சித்தாந்த மகாநாட்டுக்கட்டுரை.

(விஷு ஆவணி, கந, கச உ,)

1941. ஆகஸ்ட், 29, 30, உ.

திருநெல்வேலி, சிந்துபூந்துறை,

மா. வெ. நெல்லையப்ப பிள்ளை B. A.

எழுதியது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதம்.

சாதனவியல்.

முன்னுரை.

இந்நூல் பொதுவதிகாரம், உண்மையதிகாரம் என்னும் இரு பெரும் பகுதிகளை உடையது. அவற்றுள் ஆசிரியர் முன் பொதுவதிகாரத்தில் முதல் ஆறு சூத்திரங்களால் பிரமாணமுகத்தானும், இலக்கணமுகத்தானும் பதி, பசு, பாசங்களென்னும் முப்பொருள்களின் பொது வியல்பைக் கூறினர். பதி யென்பது கடவுள், பசுவென்பது உயிர், பாசமென்பது ஆணவ முதலியன; பதி ஒருவனே. பசுக்கள் எண்ணில்லாதன. பாசம் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். முதல் மூன்று சூத்திரங்களாலும், முறையே பதி, பாசம், பசுவென்பன உண்டு என்னும் ஆகம அளவையைக் கருதலளவையாலே வலியுறுத்தினர். அவர் நான்காவது சூத்திரத்தில் பசுவினது இலக்கணத்தையும், ஐந்தாவது சூத்திரத்தில் **பாசமாகிய திரோதான சத்தியின்** இலக்கணத்தையும் கூறினர்; இரண்டாவது சூத்திரத்தில் ஆசிரியர் பாச உண்மையை, உலகத்தை மீளப் படைத்தலாகிய புனருற்பவம் கூறுதல் வாயிலாக நிமித்தகாரணனாகிய முதல்வன் தனது துணைக்

காரணமாகிய அருளால் உயிர்களின் இருவினைக்கேற்ப முதற்காரணமாகிய மாயையிலிருந்து தனுகரண புவனபோகங்களை உயிர்களின் பொருட்டுப் படைத்து ஐந்தொழில் செய்கின்றான் என்று கூறுமாற்றால் அவனது பொது இலக்கணமுங் கூறினார். இங்ஙனமாசிரியர் இரண்டாவது சூத்திரத்தில் பதிப்பொருளின் பொது இலக்கணத்தைக் கூறினதால் ஆறாவது சூத்திரத்தில் பதிப்பொருளின் சிறப்பிலக்கணத்தை, ஏழாம் சூத்திரமுதற் கூறப்படுகிற உண்மையதிகாரத்தைச் சாரவைத்துக் கூறுகின்றார். இவ்வைந்து சூத்திரங்களாலும் ஆசிரியர் முப்பொருள்களின் பொது இயல்பைக்கூறியபின் ஆறாவதுசூத்திரத்தில்பதிப்பொருளின் சிறப்பிலக்கணத்தைக் கூறு முகத்தால், உண்மையதிகாரத்துக்குத்தோற்றுவாயாகச் சத்தினியல்பையும் அசத்தினியல்பையும் தெரித்துக்கூறினார். சத்தின் தன்மையையும் அசத்தின் தன்மையையும் தெளிவாய்த்தெரிந்து அறிந்தாலன்றி உண்மை யதிகாரத்திற் கூறப்படும் நுண் பொருள்கள் விளங்கா. ஆதலின் இதனைப்பற்றி விரிவாயறிதற்குச் செந்தமிழ்ச்செல்வி சிலம்பு XIV பால் X பக்கம் 520 முதல் 525 வரை பார்க்க. **சத்தசத்துக்களின் தன்மையை** அறிதல் உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாயாகிறது. உண்மையதிகாரமானது முப்பொருள்களின் சிறப்பியல்பைக் கூறுகின்றது. சிறப்பியல்பு பொது இயல்புபோல் இடையே தோன்றிச் சிலகாலமுளதாகி மறைந்து நீங்குதலின்றி எக்காலத்தும் மாறுபாடடையாமல் ஒரு தன்மைத்தாயுள்ளதாதலின் அதனைக்கூறுமதிகாரம் உண்மையதிகாரம் எனப்பட்டது. முப்பொருள்களின் பொது இயல்பைக்கேட்ட மாணுக்கர் தாம், பாசமாகிய விலக்கவேண்டிய பொருளை

விலக்கிப் பதியாகியகொள்ளவேண்டியபொருளைக்கொண்டு அவனை அடைதற்குத் தனக்குச் சாதனஞ்செய்யும் உரிமையும், சாதனமும், சாதனஞ்செய்யும் முறையும், சாதனஞ் செய்தலால் வரும் பயனும் தெரிந்தாலொழியச் சாதனஞ்செய்தற்கு மனவெழுச்சி உண்டாகாதாதலின் ஆசிரியர் ஏழாவது சூத்திரத்தில் பசுவுக்குச் சாதனஞ் செய்யும் உரிமையும், எட்டாஞ் சூத்திரத்தில் சாதனமும் ஒன்பதாஞ் சூத்திரத்தில் சாதனஞ்செய்யும் முறைமையும் பத்தாஞ் சூத்திரத்தில் மலநீக்கமாகிய பயனையும், பதினொன்றாவது சூத்திரத்தில் சிவப்பேறாகிய பயனையும், பன்னிரண்டாவது சூத்திரத்தில் சிவப்பேறு அடைந்தவர் தன்மையுங் கூறி உண்மையதிகாரத்தை முடிக்கின்றார்.

2. சிறப்பியல்பு பொதுவியல்புபோல் உலகப்பொருள்களோடு சம்பந்தப்படாது தனித்திருக்கும் இயல்பு. இது தன்னியல்பென்றும், சொரூப இலக்கணமென்றுங் கூறப்படும். சிறப்பியல்பு அருட் குருவினிடங் கேட்டல், கேட்டபொருளைச் சிந்தித்தல், சிந்தித்த பொருளைத்தெளிதல், தெளிந்த வாறே நிட்டை கூடல் என்னும் நான்கு வகையால் உணரப்படும். முப்பொருள்களுக்குந் தனித்தனியே சிறப்பியல்பு உண்டு. அங்ஙனமாயினும் **உலகின்மேல் வைத்துக் கூறப்படும்** பொது இயல்புபோல் அவைகளின் சிறப்பியல்பு தனித்தனியே கூறப்படுவதில்லை; ஏனெனில் பசுவினது சிறப்பியல்பானது பாசத்தை விட்டு முற்றிலும் நீங்கிச் சச்சிதானந்தமாய் நிற்றலாகிய சிறப்பியல்பையுடைய சிவத்தினோடு இரண்டறக்கலந்து நிற்றல்பற்றி அறியப்படும்; ஆதலின், தனியே சிறப்பியல்பு கூறவேண்டிய அவசியமில்லை.

ஏழாம் சூத்திரம்.

3. ஆசிரியர் ஆறுஞ்சூத்திரத்தில் முப்பொருள்களுள் சத்தும் அசத்தும் ஒன்றனை ஒன்று அறியாது என்று கூறி ஏழாவது சூத்திரத்தில் பசுவாகிய ஆன்மாவானவன், அவ்விரண்டனையும் அறியுந் தன்மையுடையவனாய்ச் சத்தையடைவதற்குச்சாதனஞ்செய்யும் உரிமையுடையவனென்று கூறுகின்றார். உரிமை - அதிகாரம்.

மேலே ஆறுவது சூத்திரத்தில் ஆசிரியர் பதிப்பொருளை, அளவைகளாலறியப்படாத அசத்துப் பொருளும், ஒருவாற்றானு மறியப்படாத சூனியப்பொருளும் அன்றியுள்ள சிவசத்து என்று கூறினாரேயன்றிப்பதிப்பொருள் **எவ்வாற்றானறியப்படுவனென்று கூறவில்லை**. அங்ஙனங்கூறாது எஞ்சிநின்ற பொருளை ஆசிரியர் ஏழாஞ்சூத்திரத்திற்கூறுகின்றாராதலின் ஏழாம் சூத்திரம் ஆறும்சூத்திரத்திற்குப் புறனடையாயிற்று. புறனடை என்ற சொற்றொடர், புறன்+அடை என்ற இரண்டு சொற்களாகியது. புறன் என்பது புறம் என்ற சொல்லின் போலி; அடையென்பது அடுத்து வருதல் புறனடையென்பது முன் சூத்திரத்துக்குச் சேர்ந்ததாய் அதிற்கூறப்படாது எஞ்சி நின்றதோர் பொருளை அதற்குப் புறமாய் அடுத்துக்கூறுஞ்சூத்திரமாகும்.

4. யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா

என்பது சூத்திரம்.

(பதவுரை)

சத்தெதிர்-சிவமாகிய சத்தின் சன்னிதியில்; யாவையும்-சுட்டறிவினாலறியப்படும் அசத்தாகிய உலகம்; சூனியமாதலின் - விளங்கித்தோன்றாதாதலின்; சத்தே - சத்தாகிய சிவம்; அறியாது - (அசத்தாகிய உலகத்தை) யறிந்து அனுபவியாது; அசத்து - அசத்தாகிய உலகம்; இலது ஆகலின் - அறிவில்லாத சடமாதலின்; அறியாது - சத்தாகிய சிவத்தை யறியமாட்டாது; இருதிறன் அறிவுளது - ஆதலால் பாரிசேட அளவையால் இருதிறனறிவுள தொன்றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய; இரண்டலா - இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள ஆன்மா - உயிராம்.

சத்தே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. ஆகலின் என்பதை இலது என்பதோடுஞ் சேர்க்க. இலது என்பதற்குமுன் அறிவு என்றசொல் அவாய் நிலையால் வந்தது. இரண்டலா என்பதில் தொக்கி நிற்கும் முற்றும்மையை விரித்து இரண்டும் அலா எனஉரைக்க. முப்பொருள்களில் பதியாகிய சத்தும், பாசமாகிய அசத்தும் ஒன்றனை ஒன்றறியாது எனவே எஞ்சி நிற்கும் பசு அவ்விரண்டனையுமறியுமென்பது பாரிசேட அளவை.

5, கருத்துரை - சத்தாகிய சிவமும் அசத்தாகிய பாசமும் ஒன்றனை ஒன்று அறியாது ஆகலின் எஞ்சி நிற்கும் பசுவானது அவ்விரண்டனையுமறியும் சதசத்தாகும்.

இச்சூத்திரம் மூன்று அதிகரணங்களையுடையது. "யாவையும் சூனியம் சத்தெதிராகலிற்சத்தேயறியாது" என்பது முதலாவது அதிகரணம். "அசத்திலதறியாது" என்பது இரண்டாவது அதிகரணம். "இருதிறனறிவுள திரண்டலாவான்மா" என்பது மூன்றாவததிகரணம். முதலாவது அதிகரணப்பொருளும் இரண்டாவது அதிகரணப்பொருளும் மூன்றாவது அதிகரணப்பொருளைத் துணிதற்கு ஏதுவாய் ஒரு பொருண்மேல்வந்தன ஆதலின் மூன்று அதிகரணங்களையுஞ் சேர்த்து இச்சூத்திரம் ஓர் புறனடையாகக் கொள்ளப் பட்டது.

இரண்டாவது அதிகரணப்பொருளாகிய 'அசத்துச் சத்தையறியாது' என்பது முதலாவது அதிகரணப் பொருளாகிய சத்து அசத்தையறியாது என்பதி லடங்கியுள்ளது. முதலதிகரணத்தில் அறியாது என்பது முனைத்து நில்லாது என்று பொருள்படும். வேறொரு பொருளாய் முனைத்து நில்லாத அசத்துச்சத்தையறியாது என்பது தெளிவு. அவ்வாறாயினும் அவற்றை ஆசிரியர் இரண்டு ஏதுக்களாக வைத்துக் கூறியது முதலதிகரண ஏதுவால் சிவாத்துவித சைவரையும் இரண்டாவது அதிகரண ஏதுவால் சிவசங்கிராந்தவாத சைவரையும் தனித்தனியே மறுத்தற்கென அறிக.

6. இரண்டலாவான்மா இருதிறனறிவுள தென்பதைச் சாதிக்க ஆசிரியர் சூத்திரத்திற் கூறிய இரண்டு ஏதுக்களையும் இரண்டு மேற்கோள்களாகக்கொண்டு முதலாவது அதிகரணத்திலும் இரண்டாவது அதிகரணத்திலுங் கூறியது பொருந்துமா எனின் பொருந்தும். ஆசிரியர் கூறவந்த

இரண்டு ஏதுக்களையும், இரண்டு வாதிகளும் ஒப்புக்கொள்ளாது மறுத்தபொழுது அவ்வேதுக்களை மேற்கோள்களாகக்கொண்டு அம்மேற் கோள்களை நிலைநாட்ட வேறு ஏதுக்கள் கூறவேண்டியது அளவை நூல் முறைப்படி வேண்டப்படுதலாற் பொருந்தும். ஏதுக்களையே அப்படி வைத்துக்கொண்டு அவற்றிற்கு வேறு ஏதுக்களைக் கூறலாகாதோ எனின் அது அளவை நூல் முறையாகாது. இந் நூற் பன்னிரண்டு சூத்திர அதிகரணங்களிலும் ஆசிரியர் மேற்கோளை முதற்கண் கூறி அவற்றை நிலைநாட்ட ஏதுக்களைக்கூறி, அவ்வேதுக்களை வலியுறுத்த உதாரணங்களை வெண்பாக்களில் வைத்துக்கூறிய முறைமையையும் அறிக.

முதலதிகரணம்.

7. ஆசிரியர் தாம் கூறுகிற சித்தாந்த உண்மையில் மாணுக்கருக்குச் சிவாத்துவிதசைவர் கூறுங்கொள்கையால் மலைவுண்டாகாமைப்பொருட்டு அவரை மறுத்தற்கு இந்த முதலதிகரணம் கூறுகின்ருர். "ஈண்டுச்சத்தினிடத்து அசத்துப்பிரகாசியாது" என்பது சூத்திரத்தின் முதற்கூற்றிற் போந்த ஏதுவைப் பதச்சேதஞ்செய்து எடுத்துக்கொண்ட மேற்கோள்.

மேற்கோளின் விளக்கம்.

8. மேற்கோளென்பது, அளவை நூல் முறைப்படி துணிதற்குளடுத்துக்கொண்டபொருள். (Logical Proposition) அது பின் கூறப்படுகிற ஏதுவினுல் துணியப்பட்டு உதாரணத்தினுல் வலியுறுத்தப்படுகிறது. சத்து என்பது

மாறுபாடின்றி என்றும் ஒரு தன்மைத்தாய் நிலைபெற்று விளங்கும் மெய்ப்பொருள்; அது சிவம். அசத்து என்பது நிலைபெற்றுநில்லாது இடையில் (உள்பொருளாய்த்) தோன்றி மறைவதாயுள்ள பொய்ப்பொருள். அது அறிவில்லாத காரிய உலகம்; ஈண்டுச் சூனியம் என்பதற்கு முனைத்து நில்லாமை, விளங்காமை என்பது பொருள். இல்லாமை என்பது பொருளன்று. "முனைத்திடாத சத்துச்சத்தின் முன்" என்பது சிவஞான சித்தியார் ஏழாவது சூத்திரம் (க) வது பாட்டு. அசத்தாகிய உலகம் மாயையிற்றோன்றிய தனுகரண புவனபோகங்களாயுள்ளது. அசத்தாகிய காரிய உலகம், உயிர்ஆணவமல இருளினோடும்விரவிநிற்பதால் மயக்கத்தைச் செய்யும் மலமென்று கூறப்படுகின்றது. உயிர்கள் மாயா காரிய உலகில் வைத்து நல்வினை தீவினைச் செய்வதால் வினையும் மலம் கன்ம மலம் என்று கூறப்படும்; வினை கன்மமென்பன ஒரு பொருட் சொற்கள். இங்ஙனம் மல இருளோடும் விரவிநிற்பதா யுள்ள அசத்தாகிய மாயாகாரிய உலகமானது பல் கோடி பகலவன் ஒளிசேர்ந்த ஒளிக்கு மேற்பட்ட அகண்டாகாரப்பேரொளியோடு கூடிய சத்தாகிய சிவத்தின் முன், பகலவன்முன் இருள்போலச் சிறிதும் விளங்காது அதனுள் வியாப்பியமாய் அடங்குமென்பது மேற்கோளினுற் போந்த பொருளாம்.

9. இவ்வதிகரணத்தில், சத்தாகிய சிவம், அசத்தை யறியுமோ யறியாதோ என்பது ஐயப்பாடு.

10. இனி ஆசிரியர் தாம் கூறிய மேற்கோளைப்பற்றிச் சிவாத்துவிதசைவர் கூறுகிற தடையுரைகளினுல் மாணக்கர்

மலையாமற்பொருட்டு, சிவாத்துவித சைவர்கொள்கையை மறுக்கத் தொடங்குகின்றார்.

ஆசிரியர் மறுப்புரையை நாம் அறிதற்கு முன் அவருடைய கொள்கைகளின்னவென்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

தத்துவாதீத சமயமாகிய சைவ சமயத்துக்குப்புறம்பே, புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயமென முறையே ஒன்றுக்கொன்றுமேலாக 36 தத்துவங்களுக்கு உட்பட்ட நிலைகளில் வைத்துக் கூறப்படுஞ் சமயங்கள் நால்வகைப்படும். உலகில் அவை எண்ணிக்கையில் இருபத்துநான்கு சமயங்களாகும். உலகிலுள்ள மக்களுக்குப்பலவாறாகச் சமயங்களமைதல், அவர்களுக்கு அவர்களுடைய மலப்பிணிப்பினளவு அறிவு விளங்குதலின்மையாலும், மலப்பிணிப்பினீக்கத்தினளவு அறிவு விளங்குதலுண்மையாலுமாகும். அவற்றுள் சிவாத்துவிதசைவர் ஆறு அகச் சமயவாதிகளுள் ஒருவர். அவர் சித்தாந்த சைவரோடொப்ப இந்நூலில் பொதுஅதிகாரம் கூறுகிறபடி பதி, பசு, பாசமுப்பொருள்களின் உண்மையையும் இலக்கணத்தையும் தத்துவங்களுக்குத் தோற்ற ஒடுக்கங்களையும், ஆன்மா அஞ்சவத்தைப் படும் வேறுபாடுகளையும் கூறினும் பதிக்கும், பசு பாசங்கட்கும் உள்ள வேற்றுமை குணகுணிகட்குத்தம்முள்வேற்றுமைபோல உள்வேற்றுமையே யன்றிப் புறவேற்றுமையின்றென்றும், மரத்தின் வியாப்பியமான, கவடுகோடு முதலியன வெல்லாம் மரமேயாமாறுபோலச் சதசத்தாகிய பசுவும், அசத்தாகிய பாசமும் சத்தெனவேபடுமென்றும், பதித்தன்மையின் வேறாய்ப் பசுவுக்கு அறி

யுந்தன்மை உண்டெனில், பசு, பதிக்குவேறான தனித்த முதலெனப்பட்டு வழுவாமாகலின், சத்தாகிய பதிப்பொருளே பசுவினிடமாக நின்று அறியுமென்றும், அனைத்துஞ் சத்தாயவழிச் சத்தின்வேறாய் அறியப்படும் பொருள் ஒன்றின்மையால், அஃதறியுமாறு யாங்ஙனமெனக் கேட்பின் புறவேற்றுமை இன்றாயினும் உள்வேற்றுமையாகி அசத்தாகிய பாச முண்மையின், அதனை அஃதறிதல் கூடுமெனவுங் கூறுவர். அவர் இறைவனது சிற்சத்தியும்முதற்காரணமாகும் என்று சிற்சத்திக்குப் பரிணாமங்கூறுதலால், பரிணாமவாதியென்றும் கூறப்படுவர். பதியினுடைய ஞானமானது பசுவின்பொருட்டுப் பசுவினிடமாக நின்று அறியுமென்றும் கூறுவர்.

11. இம் முதலதிகரணத்தில் ஆசிரியர் கூறிய மேற்கோளை மறுத்துச் சிவாத்துவித சைவர் கூறுந் தடையுரையாவது:

"சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது" என்பதில் அசத்துப் பிரகாசியாது என்பதற்கு நீர் அசத்துச்சத்துக்கு வேறு பொருளாக அதுகாணும்படி முனைத்து நில்லாது என்று பொருள் கூறுகிறீர். நான் கீழே கூறுகிறபடி சித்தாந்த நூல்களே சத்தாகிய சிவத்தின்முன் அசத்தாகிய காரியவுலகம், முனைத்து நிற்கச்சத்து அதனை அறியுமென்று கூறுகின்றன. சிவஞானசித்தியார் முதலாவது சூத்திரம் 19-வது செய்யுள்.

(1) 'தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதிதன்னினின்றே' என்று கூறுதலினாலே சிவசத்தியின்முன் காரணரூபமாகிய மாயையிலிருந்து காரியரூமாகிய உலகம் தோன்றுமெனவும்.

(2) சிவப்பிரகாசம் முதலாவது சூத்திரம் இரண்டாவது செய்யுள் "கூடு மொளிவளர் குடிலை மாயை மேவி" என்று கூறுதலினாலே சிவசத்தியின்முன் அதன் சங்கற்பத்தினாலே பராசத்தி முதலிய அஞ்சு சத்திகளும் சுத்த மாயையிற் பதிதலினாலே சத்த ரூபமாகிய நாதவிந்துக்களும், அர்த்தரூபமாகிய சிவதத்துவமும் சத்திதத்துவமும் விந்துவவிருந்து சாதாக்கிய தத்துவமும் தோன்றுமெனவும்.

(3) சிவஞானபோதம் முதலாவது சூத்திரம் இரண்டாமதிகரணம் இரண்டாவது வெண்பா 19-வது செய்யுள், "தாரகமா மத்தன்ரு ணிற்றல்" என்று கூறுதலினாலே அத்தன் ருளாகிய அருட்சத்தி மாயைக்குத் தாரகமாகுமெனவும்.

(4) சிவஞான சித்தியார் இரண்டாவது சூத்திரம் 53 வது செய்யுள் "விமலனுக்கோர் சர்தியாய்" என்று கூறுதலினாலே மாயை சத்தாகிய சிவதுக்கு ஓர் சத்தியெனவும்.

(5) சிவஞான சித்தியார் 5-வது சூத்திரம் ஏழாவது செய்யுள் "உலகமே யுருவமாக" என்று கூறுதலினாலே உலகஞ்சத்தாகிய சிவத்தினுடைய உருவமெனவும். (திருமேனி)

(6) சிவஞான சித்தியார் (க) ம் சூத்திரம் 56 வது செய்யுள் "அத்துவாமூர்த்தியாகி" என்று கூறுதலினாலே ஆறு அத்துவாக்களும் சிவத்தினுடைய வடிவங்களெனவும்.

(7) திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய "இருநிலனாய்த்தீயாகி நீருமாகி" என்ற முதற்குறிப்பையுடைய திருத்தாண்டகப்பாட்டுக் கூறுகிறபடி மண், நீர், தீ, வளி,

வெளி, ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய எட்டும் சத்தாகிய சிவத்தினது வடிவங்களெனவும் பெறப்படும்.

மேலே குறிப்பிட்ட (1) (2) செய்யுட்கள், சிவ சத்தியின் முன்னர்க் காரிய உலகங்களாகிய அசத்துத் தோன்றுமென்று கூறியிருக்கவும் அதற்கு மாறாக நீர் சத்தின்முன் அசத்துமுனைத்துநின்று பிரகாசியாது என்று கூறியது பொருந்தாது.

(3) ஆம், (4) ஆம் குறிக்கப்பட்ட செய்யுட்கள், முறையே சத்தாகிய சிவசத்தியானது மாயைக்குத்தாரகமெனவும், சிவமாகிய சத்துக்கு மாயை ஓர் சத்தியெனவும் கூறுகின்றன. மாயைக்குத் தாரகமாயிருக்கிற சத்து மாயையின் காரியமாகிய அசத்தை எங்ஙனமறியாதிருக்கும் ? அவ்வாறே சத்துத் தனக்குச் சிற்சத்தியாயிருக்கிற மாயையின் காரியமாகிய அசத்தை எங்ஙனம் அறியாதிருக்கும் ? அங்ஙனம் அறியாதிருக்குமென்பது பொருந்தாது.

(5, 6, 7)ல் குறிப்பிடப்பட்ட செய்யுட்கள், சத்துக்கு அசத்தாகிய காரியஉலகமும், அக்காரிய உலகிலுள்ள அத்துவாக்களும், மண் முதலிய ஐந்து பூதங்களும் வடிவங்களென்று கூறியிருக்கவும், சத்தாகிய சிவம் தனக்கு வடிவங்களாயிருக்கிற அசத்தாகிய காரிய உலகத்தையும் அவ்வுலகிலுள்ள அத்துவாக்களையும் ஐந்துபூதங்களையும்அறியாது என்று சித்தாந்த உண்மைக்கு மாறாக நீர் கூறுவது பொருந்தாது. மேலே நான் கூறியவாறு சத்து அசத்தை யறியாது என்பது சித்தாந்த நூல்களிற் கூறப்பட்ட உண்மைகளுக்கு மாறாகயிருப்பதாலும் மாயாவாதி கூற்

ருய் முடியுமாதலாலுஞ் செல்லாது. ஆதலால் சத்தின் முன் யாவையுஞ் சூனியமென்று கூறுவது அவசித்தாந்தமாக முடியும். நான் முடிவாகக் கூறுவது என்னவெனில் மிகுத்த அறிவுடைய சத்தாகிய சிவமானது தனித்த பொருளல்லாத உயிரின் பொருட்டு உயிரினிடத்தில் பாசமாகிய கருவிகரணங்களினின்று அறியுமென்பது. சிவாத்துவித சைவர் கூறிய தடை உரைகளைக்கேட்ட ஆசிரியர் அதனை மறுத்து அடியில் வருமாறு கூறித் தமது மேற்கோளை நிலை நாட்டுகின்றார்.

12. சிவத்தோடு இயைந்து நிற்கிற சிவசத்தியின் சந்நிதியில் அச்சத்தியின் சங்கற்பத்தால் மாத்திரம் அசத்தாகிய உலகம் தொழிற்படுமென்பது (1, 2)ல் குறிப்பிட்ட செய்யுட்களின் பொருளேயன்றி, நீர் கூறியவாறு சத்து அசத்தை யறியும் என்பது பொருளன்று. சந்நிதி, முன், என்பன ஒரு பொருட் சொற்கள். சந்நிதி என்பது சிவசத்தி அவ்வக்காரியங்களில் உன்முகமாதலாகிய சங்கற்பமேயன்றி நீர் கூறும் அபிமுகமாத்திரையன்று (Presence)

மலப்பிணிப்புச்சிறிதுமின்றி எங்கும் நிறைந்து வியாபகமாயிருக்கிற சிவசத்தியானது எல்லாப் பொருள்களையும் ஒருங்கே அறிவதன்றி மலப்பிணிப்புள்ள நம்மனோர் உலகப் பொருளை ஒன்றொன்றாகச் சுட்டியறிதல் போல அசத்தையறியாது என்பது நாம் கூறிய மேற் கோளின் பொருளாகும்.

அறியாது என்பதற்குப் பொருள் அழுந்தி அறிந்து அனுபவியாது என்பதே ஆதலின் தானேபேரின்பப் பொரு

ளாயிருக்கிற சத்தாகிய சிவமானது அசத்தையறிந்து உலக சிற்றின்பமனுபவிக்கு மென்பது சிறிதும் பொருந்தாது.

" மன்னு சிவன் சந்நிதியில் மற்றுலகஞ் சேட்டித்த
தென்னும் மறையின் இயல்மறந்தாய் - சொன்னசிவன்
கண்ணுவுளம் விளையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணுன் சிவனசத்தை இன்று "

என்ற ஐந்தாவது சூத்திரம் இரண்டாவது வெண்பாவில் சிவன் சந்நிதியில் உலகம் தொழிற்படுதலும் சிவன் அசத்தையறிந்து அனுபவியான் என்பதும் தெளிவாய்க் கூறப் பட்டிருத்தலையுங் கண்டு உண்மையறிவீராக.

மூன்றினாலே மாயையானது அதன் காரண நிலையில் சத்தாகிய சிவத்தினது உடைமைப் பொருளாய் அதன் வியாபகத்துளடங்கியிருக்குமென்ற உண்மை பெறப்படுவ தன்றிச்சத்து அசத்தையறியுமென்பது பெறப்படாது. மேல் (1)லும் (2) லும் கூறியவாறு சிவசத்தியானது கரணத்தா லன்றித் தனது சங்கற்பத்தால்மட்டும் இந்தக்காரண நிலை யிலுள்ள மாயையிலிருந்து காரிய உலகத்தைப் படைக் கின்றது. சங்கற்பத்தால் படைத்த லென்பது "இது இப் படி ஆகுக" என்று நினைத்தமாத்திரத்திலேயே படைத்தற் றொழில் நிகழ்வது. எங்கும் நிறைந்து வியாபகமாயிருக்கிற சிவசத்தி தனக்குள் வியாப்பியமாயடங்கியிருக்கிற மாயை யை அதற்கு வேருய் நின்று அறியுமென்று நீர் கூறுவது பொருந்தாது. (4) ஞலே, நீர் உம்முடைய கொள்கைப்படி மாயை சத்தாகிய சிவத்துக்குச் சத்தியென்று நினைத்துக் கூறியதற்குத்தாற்பரியம் பரிக்கிரகசத்தி யென்பதாம். பரிக்

கிரகசத்தியாவது வேண்டும்போது உபயோகித்துக் கொள்
ளப்படுஞ்சத்தி. இதில் மாயையோடு சிற்சத்தியும் காரியமா
மென்று கூறுவதினாலே, அச்சிற்சத்திக்குப் பரிணாமங்கூறி
அசத்தாகிய காரிய உலகம் உண்டாகிறது என்று கூறு
கின்றீர். சிவத்தைவிட்டு நீங்காத அருளாகிய சிற்சத்திக்குப்
பரிணாமங்கூறுதல் பொருந்தாது. ஆதலின் நீர் மூன்றினாலும்
நான்கினாலும் கூறிய தடை உரைகள் சித்தாந்த உண்மைக்கு
மாறானவைகள் ஆதலின் அவை செல்லா (5, 6, 7) ல்
கூறுகிறபடி சத்தாகிய சிவத்துக்கு உலகமும் (உடலும்)
அத்துவாக்களும் ஐந்து பூதங்களும் வடிவங்களென்றது,
சிவம் தனது பொது இயல்பு நிலையில் அவற்றோடு நிறைவுற்
றுக் கலந்து எல்லாமாகி நிற்றலானும், அவை அல்லனாய்
நிற்றலானும் சடசித்துக்களை யெல்லாம் இயக்கி உடனு
மாய் நிற்றலானும் உயிர்க்குயிராய் நின்று சித்துப்பொருளை
யும், அசித்துப்பொருளையும் இயக்கியும், அறிவித்தும், ஐந்
தொழில் செய்தற் பொருட்டாகும். சிவம் உயிர்களை அறி
வித்தும், இயக்கியும் நிற்பதோடு இவ்வடிவங்களிலும்
நிறைந்து நின்று இயக்கவில்லையானால் உயிர்களுக்கு அவ்
வடிவங்களிடத்து 'உலகபோகம் நுகர்தல் உண்டாகாது.
உலக போக நுகர்தல் உண்டாகி உயிர்களுக்குப் 'பேரின்ப
நிலையடைதற்குப் படிமுறையில் பக்குவம் வருவித்தலாகிய
திரோதான சத்தியின் தொழில் நிகழாது. ஆதலின் திரோ
தான சத்தியால் அவற்றோடுளதாகிய இயைபு நோக்கி
அத்துவா முதலியனவும் வடிவெனக்கூறுதல் உபசாரமே
யாம். சிவஞான சித்தியார் (க)ம் சூத்திரம் (55) வது
பாட்டு, சிவம் மாயாகாரிய உலகத்தில் வியாபகமாய்
நிறைந்து நிற்பினும் அதனால் சிறிதும் விகாரமடையாது;

ஆகையினாலே சத்தாகிய சிவம் தனக்குளடங்கியிருக்கிற அசத்தாகிய காரிய உலகத்தை வேறாக நின்று அறியுமா றில்லை என்னும் மேற்கோள் சாதிக்கப்பட்டதே யன்றி நீர் கூறுகிறபடி மாயாவாதி மதமாக முடியாது.

13. ஆசிரியர் கூறிய மறுப்புரையைக் கேட்ட சிவாத்துவித சைவர் மேற்கோளைப்பற்றி ஆசங்கித்து மறு படியுங் கூறுவதாவது :- நீர் சிவம் வியாபக அறிவுப் பொருளென்று கூறியது ஒக்குமாயினும் அது அசத்தாகிய உலகத்தையும் அறியுமென்று ஏன் கூறுதலாகாது. வியாபக அறிவாகிய பேரறிவில் அசத்தாகிய உலகத்தையறிதற்கு ஏதுவாகும். சுட்டறிவாகிய சிற்றறிவு அடங்குதலாலே, வியாபகஅறிவுடைய சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத் தையும் அறியுமென்பது பொருந்தும்.

14. சிவாத்துவித சைவர் கூறிய ஆசங்கை உரை யைக் கேட்ட ஆசிரியர், அவ்வாசங்கையை நீக்கி மேற் கோளைச் சாதித்தற்குக் கூறிய ஏது "மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்" என்பது. ஏதுவின் பொருள் - மெய் யென்பது இங்கே மெய்யறிவையும், பொய் என்பது பொய்யறிவையும் ஏற்புழிக்கோடலாற் குறிக்கின்றன. அவ்வாறு கொள்ளாக்கால் "சூத்திர முதலதிகரண மேற்கோளில்யாவையுஞ் சூனியம்சத்தெதிர்" என்னும் ஏதுவைத்திருப்பக் கூறுவதாகி இவ்வேதுவினாற் பயனென்றுமில்லாமற் போகும். மெய்யறிவென்பது எக் காலத்தும் ஒருதன்மைப்பட நிலைபெறுவதாய் யாதொரு கருவியும் வேண்டாது. எவற்றாலுமறிவிக்கப்படாது, எவற் றினையும் ஒருங்கே அறிந்தாங்கறிவதாய்த் தானேயறியும்

சிவத்தினது இயற்கையறிவு. பொய்யறிவென்பது இடையே தோன்றிச் சிலகால முளதாயிருந்து, பின் மறைவதாய், தானே யறியாது சிவத்தினால் கருவிகளைத் துணைக்கொண்டு அறிவிக்க அறியும் அறிவு.

மெய்யினிடத்து இயற்கையறிவுபிரகாசிக்கும்பொழுது அப்பிரகாசமாய் நிற்றல் - விளங்கிநிற்றலின்மை; அதாவது இயற்கை அறிவோடொப்ப ஒருங்கு நில்லாமை, சத்தாகிய சிவத்தினது இயற்கையறிவு விளங்கும்பொழுது அதனோடொப்ப அசத்தாகிய காரிய உலகத்தை அறிதற்கேதுவாகிய ஆன்மாவின்கண் விளங்கும் சேர்க்கையறிவு அதனுள்ளடங்கி நிற்பதன்றி முனைத்துநின்று விளங்காது என்பது ஏதுவினாற் பெறப்படும் பொருள்.

15. ஆசிரியர் இந்த ஏதுவினால் தமது மேற்கோளைச் சாதித்தற்குச் சிவாத்துவித சைவரை மறுத்துக் கூறுமுறையாவது:- நீர் இயற்கையறிவாகிய பேரறிவில் சேர்க்கையறிவாகிய சிற்றறிவு அடங்குமென்று மயங்கியறிந்து கூறுகின்றீர். அநாதிமுத்தனாகிய சிவத்தினது இயற்கையறிவாகிய பேரறிவு எல்லையில்லாதது. அதில் அடங்காத பொருள் ஒன்று மில்லை. அப்பேரறிவுக்குள் அடங்காது பசுபாசங்களிருக்குமாயின். சிவத்துக்கு அவற்றை அடக்கி ஆளும் முழுமுதற்றன்மை உண்டாகாது. மேலே கூறியபடி பேராற்றலுடைய இயற்கையறிவாகிய பேரறிவு காலம், இடம், காரண காரிய முறைமை ஆகிய இவைகட்குட்படாமல் கடந்துநிற்பதால் எல்லை உடையதன்று. சேர்க்கையறிவாகிய சிற்றறிவே, காலம், இடம், காரண காரிய முறைமை ஆகிய இவற்றை ஆதாரங்களாக உடைய அள

வுக்குட்பட்டுப் பலவாருன மலப்பிணிப்புக்களையுடைய ஆன்மாக்களுக்கு அவர்களுடைய மலப்பிணிப்பு நீங்கிய அளவு விளங்குதலால், அச்சேர்க்கையறிவுக்குப்பலவாருன எல்லைகள் உண்டு, எல்லையில்லாத பேரறிவில் பலவாருன எல்லைகளையுடைய சிற்றறிவு எங்ஙனமடங்கும்? மேலும் ஆன்மாத் தனது பொது இயல்பு நிலையில் அசத்தாகிய உலகத்தைச் சார்ந்து அதன் வயமாய் நின்று, ஐம்பொறி மனமுதலிய கருவிகளைத் துணையாகக்கொண்டு அறியும் சுட்டறிவால், வேருய் நின்று சுட்டுப்பொருள்களை அறியும். ஆன்மாத் தனது சிறப்பியல்பு நிலையில் உலகத்தையும் ஐம்பொறி முதலிய கருவிகளையும் முற்றிலும் விட்டு அருளைத்துணைக் கொண்டு சிவத்தைச் சார்ந்து அதன் வியாபக அறிவுக்குள்ளடங்கி அசஞேடத்துவிதமாய் ஒன்றுபட்டு நின்று உணரும் மெய்யறிவால் முப்பொருள்களின் சிறப்பியல்புகளையறிந்து முத்தியடையும். சிற்றறிவு ஆன்மாவுக்குக் கருவிகளால் விளங்குவது. பேரறிவு அருளால்விளங்குவது. இதனுல் சேர்க்கையறிவாகிய சிற்றறிவு மலம் நீங்கிய அளவு பெருகிப் பெருகி விளங்குதலானது ஆன்மா ஐம்பொறி முதலிய கருவிகளைவிட்டு அருளைக் கருவியாகக் கொள்ளுவதற்குப் பக்குவம் வருவிக்குமேயன்றி ஆன்மாவின் சிற்றறிவு பேரறிவாகப் பெருகி விளங்கமாட்டாது என்பது நன்குபுலனுகும். சிற்றறிவு வேறு, பேரறிவுவேறு. பேரறிவுடைய சிவத்துக்கு சிற்றறிவு வேண்டப்படுவதே இல்லை. சகலநிலையில் சிற்றறிவுடைய ஆன்மாவுக்கே சுத்த நிலையையடைந்து விளங்கும் பேரறிவு முத்தியின் பொருட்டு வேண்டப்படுவதாகும். இங்ஙனம் சிற்றறிவாகிய சேர்க்கையறிவு, பேரறிவாகிய இயற்கையறிவிலடங்காது. ஆத

லின் சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத்தையறியுமென்று நீர் கூறுதல் செல்லாது என்று அறிந்து மேற்கோளின் உண்மையை அறிவீராக.

16. ஆசிரியர் கூறிய மறுப்புரையைக்கேட்ட சிவாத்வித சைவர் பின்னும் மேற்கோளை ஆசங்கித்துக் கூறுவதாவது.— சத்தாகிய சிவம் தனக்கு அசத்தாகிய உலகத்தை யறிதற்கு ஏதுவாகிய சுட்டறிவு இல்லாமையால் அசத்தாகிய உலகத்தை அறியாது என்று கூறின், முற்றுணர்வுடைய சிவத்துக்கு சுட்டறிவின்மை குறைபாடுடைமை யாதலாகிய குற்றமாகும் என்பது.

17. சிவாத்துவித சைவர் கூறிய ஆசங்கை உரையைக் கேட்ட ஆசிரியர் சுட்டுணர் வின்மை முற்றுணர்வுடைய சிவத்துக்குக் குற்றமாகாது என்று தமது மேற்கோளின் ஏதுவை வலியுறுத்துதற்கு ஓர்வெண்பாவினுலே உதாரணங் கூறுகின்றார்:—

" அன்னியமிலாமை யரற்கொன் றுணர்வின்று
மன்னிய மிலானசத்தைக் காண்குவனே—லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று "

(பதவுரை.) அன்னிய மிலாமை - தன்னுள் வியாப்பியமான பசு பாசங்களோடு வேற்றுமையின்றி உடனாய் நிற்றலையுடைய; அரற்கு - பதியாகிய முதல்வனுக்கு, ஒன்று உணர்வு - சுட்டியறியக் கிடப்பதாகிய ஏகதேச அறிவு; இன்றும் - இல்லையாம் (ஆகலான்)அன்னியம் இலான்- வேற்றுமையின்றி உடனாய் நிற்றலை யுடைய பதியாகிய முதல்வன் அசத்தைக்காண்குவனேல் - அசத்தாகிய உல

கத்தை அறியனுறுவானுயின், அன்னியமாக் காணுன் - அறிந்தாங்கறிவனன்றி வேருகக் சுட்டியறிவானல்லன். கதிர்முன் இருள்போல - ஞாயிற்றின்முன் இருள்போல, அவன்முன் - அப்பதியாகிய முதல்வன் எதிர், மாணு அசத்து - நன்மையில்லாத அசத்தாகிய உலகப், இன்மை - விளங்கி நில்லாது ஆகலான்.

மாணுமை-மாட்சியில்லாமை-அதாவது வியாபக அறிவுக்கு விடயமாகாமை. அது ஈண்டு உலகம் வியாபக அறிவாகியபேரறிவிற்கு அதனுலறியப்படும் மாட்சிமை யில்லாமையைக் குறித்து நிற்றலால் மாணு அசத்து என்பதற்கு நன்மையில்லாத அசத்தென உரை செய்யப்பட்டது. இன்மை - ஈண்டு விளங்காமை குறித்து நின்றது. உண்மைக்கு எதிர் மறையன்று. மற்று- அசை. கதிர் என்பது கதிரையுடைய ஞாயிற்றையும், உணர்வு என்பது உணர்வால் உணரப்படுவதையுங் குறித்தலால் ஆகுபெயர்கள். கதிர் முன் இருள் என்பது ஞாயிற்றின் முன் இருள் முனைத்து நில்லாது என்பதைக்குறிக்கிற ஒருபுடை உவமை. இன்மை குறிக்கும் முற்றுவமையன்று.

(கருத்துரை.) ஞாயிற்றின்முன் இருள் விளங்கித்தோன்ருதவாறு போலப் பதியாகிய முதல்வன் முன் அசத்தாகிய உலகம் விளங்கித் தோன்ருமல் அடங்கிக்கிடக்கு மாதலால் அசத்தாகிய உலகத்தைப் பதியாகிய முதல்வன் சுட்டியறியான்.

18. மேலே கூறிய உதாரண வெண்பாவினுல் ஆசிரியர் சிவாத்துவித சைவருக்கு மேற்கோள் எதுவை

வலியுறுத்திக் கூறுவதாவது:- அசத்தாகிய நிலையில்லாத உலகம் சிவத்தினது வியாபக அறிவுக்குள் அடங்கி யிருப்பதன்றி அவ்வறிவுக்குப் புறம்பாக உளதாகாது. உலகம் சிவத்தினது வியாபக அறிவுக்குப் புறம்பே யிருக்குமாயின் அச்சிவத்துக்கு அவ்வுலகத்தை ஆளும் முழு முதற்றலைமை யில்லாமற்போகும். நீர் கூறும் சுட்டறி வென்பது வேருக நின்று அறியப்படும் குறைபாடுடைய அறிவாதலால் தனக்குள் வியாப்பியமாய் அடங்கியிருக்கும் அசத்தாகிய உலகத்தை "அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்" நீக்கமற நிறைந்திருக்கும் சிவம் அவ்வுலகத்தை வேருக நின்று அறியாது. ஆதலால் மலப்பிணிப்புச் சிறிது நீங்குதலால், ஆன்மாவுக்குச் சகல நிலையில் விளங்குஞ் சுட்டறிவு அநாதி மலமுத்தத் தன்மையுடைய சிவத்துக்கு இல்லாமலிருப்பது அவனது அருளாகிய இயற்கைக் குணமாய் மேம்பாடாவதன்றி நீர் கூறுவது போலக்குறைபாடுடையது ஆக மாட்டாது. இங்ஙனம் வெண்பாவிற் கூறப்பட்ட உதாரணத்தினுலே மேற்கோளின் ஏது வலி யுறுத்தப் பட்டது.

19. இங்ஙனம் மேலே கூறியவாறு முதலதிகரணத்தில் ஆசிரியர் கூறுகிற (1) மேற்கோள் (2) அதன்கண் ஐயப்பாடு (3) சிவாத்துவித சைவர் மேற்கோளை ஆசங்கித்துக் கூறும் கொள்கை (4) அக்கொள்கையை மறுத்து ஏதுவினுற் சாதிக்கும் சித்தாந்த உண்மை (5) அவ்வுண்மைக்கு உதாரண வெண்பாவினுற் கூறும் இயைபு ஆகிய இவ்வைந்து உறுப்புக்களும் ஒன்றன் பின் ஒன்று முறையாகக் கூறப்பட்டமை யறிக.

இரண்டாவது அதிகரணம்.

20. சூத்திரத்தில் அசத்து இலது என்று கூறப்பட்ட இரண்டாவது அதிகரணத்தைப் பதச்சேதஞ் செய்தும், தொக்கி நிற்கிற அறிவென்ற சொல்லை வருவித்துரைத்தும் எடுத்துக்கொண்ட மேற்கோள்-அசத்தினுக்கு உணர்வின்று என்பது. அதன் பொருள், அசத்தென்பது -இங்கே உயிர் பெத்த நிலையில் அறிதற்குக் கருவியாகவிளங்கும் தத்துவப் பிரபஞ்சத்தை; அனைய பிரபஞ்சத்திற்கு அறிவு உண்டென்று கூறுவாரில்லாமையின். (உணர்வு என்பது அறிவு. இன்றென்றது இல்லை.)பிரபஞ்சம் உலகமென்பன ஒரு பொருட் சொற்கள். உயிர் அறிதற்குச் சாதனமாய் விளங்கும் கருவி கரணங்களுக்கு அறிவில்லை என்பது மேற்கோளின் பொருள்.

21. A. இவ்வதிகரணம் சிவசங்கராந்தவாதி மதம் பற்றி நிகழும் கடாவை ஆசங்கித்து இரண்டாங் கூற்றிற் போந்த ஏதுவைக் கண்ணழித்து உரைத்து மேற்கொள்ளுந் தலைக்கருதியது. சிவசங்கராந்தவாதி என்பார் மேலே கூறியவாறுள்ள ஆறு அகச்சமயவாதிகளுள் ஒருவர் அவர் முதலதிகரணத்தின் மேற்கோளை ஒப்புக்கொள்வாராயினும், இவ்வதிகரணத்தின் மேற்கோளை ஆசங்கித்து உரைக்கின்றார். அவர் ஆசிரியர் கூறிய மேற்கோளை ஆசங்கித்துக் கூறுந் தடையுரையாவது:- பெத்த நிலையில் விகாரமின்றி நிற்கிற ஆன்ம சன்னிதியில் விளக்கின்முன் கண்ணொளி பொருளைக் காண்பதுபோல அசத்தாகிய கருவி கரணங்கள் உலக விடயங்களை அறியும். அதுபோல முத்தி நிலையிலும் கண்ணாடியின் முன் அதன் நிழலுக்குப் பிரகாசமுண்டா

வது போல, அக்கரணங்களே சிவகரணங்களாக மாறி விகாரமில்லாத ஆன்ம சன்னிதியில் சத்தாகிய சிவத்தையறியும். பதிஞானம் பசு ஞானம் என்று கூறுதல் போலப் பாசஞானமும், அவற்றோடொப்பச் சித்தாந்த நூல்களிற் கூறப்பட்டிருக்கவும் பாசமாகிய கரணங்களுக்கு ஞானம் அறிவு இல்லை என்றல் பொருந்தாது.

23 எனச் சிவசங்கிராந்தவாத சைவர் மேற்கோளை ஆசங்கித்துக்கூறிய தடையுரையைக் கேட்ட ஆசிரியர் அதனை ஓர் ஏதுவினால் மறுத்துக் கூறுகின்றார். " அதுதான் நிரூபிக்கிலின்றாகலான் " என்பது ஏது. அதுவென்பது அசத்தினது உணர்வைக்குறிக்கிறது.

நிரூபிக்கில் - ஆராய்ந்துபார்த்தால். இன்று - இல்லை. பாசஞானமென்றுகூறுதலால், மேலீடாய்ப்பார்த்தால் பாசமாகிய கரணங்களுக்கு ஞானமாகிய அறிவு உளது போலத் தோன்றினும் நுணுகி ஆராய்ந்து பார்த்தால் பாசத்துக்கு அறிவு இல்லை என்பது தெரியவரும் என்பது ஏதுவின் பொருளாகும்.

மேலேகூறிய வாற்றால் நீர் மேற்கோளை ஆசங்கித்துக் கூறிய தடை உரை சிறிதும் பொருந்தாதாகி நாம் கூறிய மேற்கோளின் உண்மையே நிலை நாட்டப்பட்டதென்று அறிக.

25. பாசத்துக்கு ஞானம் உள்ளதுபோலத் தோன்றி இலதாதல் யாங்ஙன மென்னும் ஆசங்கையை உவமை முகத்தால் நீக்கி அதனை வலியுறுத்தற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:-

பேய்த்தேர்நீ ரேன்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமையின்-வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதேனக் காண்.

(பதவுரை) *பேய்த்தேர்-முதுவேனிற் காலத்து நண் பகலில் பாலை நிலத்திற் காணப் படுவதாகிய கானலை, நீர் என்றுவரும்-நீர் என்று கருதிஅதனை உண்ணவருகின்ற* பேதைக்கு - *நீர்* வேட்கையை *யுடைய மடவோ*னுக்கு *மற்று அணைந்த பேய்த்தேர்-அதனை அடுத்தபொழுது தன்னு லடையப்பட்ட அக்கானல்; அசத்தாகும் பெற்றிமையின்- நீராந்தன்மையின்றிப் பொய்யாந்தன்மை போல; வாய்த்து- குரவன் அறிவுறுக்கும் உபதேச மொழி கிடைத்து, அதனைக் கண்டுணர்வார் இல்வழியின் - அவ்வசத்தினியல்பை ஆராய்ந்தறிவார் இன்றி அறிய மாட்டாதார் உள்வழி, அசத்துஇன்மை-அவர்க்கு அதன்கண்; அறிவுள்ளதாய்மதிக் கப்படும் சத்தான்தன்மையே; காணும் - காணப்படும் கண்டுணர்வார்-அவ்வுபதேசமொழிகிடைத்து அதனியல்பை ஆராய்ந்தறிய வல்லார்க்கு; இல்லதுஎனக்காண்-அவ்வசத்து அறிவில்லதேயாம் என்று அறிவாயாக.*

(குறிப்பு) *மற்று - வினைமாற்று, மற்று என்பது நீரென்று தோன்றிஅதற்குமாருக நீரில்லைஎன்று தோன்றும் என்ற பொருள் பயப்பதால் வினை மாற்றுப் பொருளில் வந்தது; மை - பகுதிப்பொருள்விகுதி, இன் உவம உருபு வாய்ப்ப என்னும் வினையெச்சம் வாய்த்து எனத்திரிந்து நின் றது. வாய்த்து என்பதற்கு முன் குரவன் அறிவுறுக்கும்*

உபதேசமொழி என்ற சொற்கள் அவாய் நிலையான் வந்தன. அசத்தின்மை - சத்தான்தன்மை. இலது என்ற சொல்லுக்கு முன் அறிவென்ற சொல் அதிகாரப்பொருள் பற்றி வருவித்துரைக்கப் பட்டது.

(கருத்துரை) அறியாதவனுக்குக் கானலானது உண்ணத்தகும் நீராய்த்தோற்றினும் அதனையடுத்துப் பார்த்தபொழுது, நீர் இல்லாதவாறுபோல,ஆராய்ந்தறிந்தபொழுது அசத்தாகிய கரணம் அறிவுடையதுபோலத் தோன்றினும் அறிந்தவிடத்து அக்கரணம் அறிவில்லாததேயாம்.

26 மேலே கூறியவாறு இவ்வதிகரணத்தில் ஆசிரியர், கூறிய மேற்கோள் (1) அதன்கண் ஐயப்பாடு (2) சிவ சங்கிராந்தவாதி கூறுங் கொள்கை (3) அதனை மறுத்துரைக்கும் ஏதுவாகிய சித்தாந்தத் துணிபு (4) சித்தாந்தத் துணிபுக்கு இயைபாகிய உதாரணம் (5) ஆகிய இவ்வைந்து உறுப்புக்களும் அடங்கியிருப்பன அறிக.

மூன்றுமதிகரணம்.

27. சூத்திரத்தின் இறுதியில் மூன்றுவது வரியிற்கூறப்பட்ட ஆன்மாவின் சிறப்பிலக்கணத்தைச் சாதிக்கு முன் இரண்டுவரிகளில் ஆசிரியர் முறையே சத்து அசத்தையறியாது என்றும், அசத்துச் சத்தையறியாதென்றும் ஏதுக்களாகக் கூறினர். சிவாத்துவித சைவரும், சங்கிராந்தவாத சைவரும் அவ்விரண்டனையும் ஆசங்கித்துத் தடையுரைகூறிய

பொழுது ஆசிரியர் அவ்விரண்டு விஷயங்களையும் முறையே முதலதிகரணத்திலும் இரண்டாவது அதிகரணத்திலும் மேற்கோளாக எடுத்துக்கொண்டு அம்மேற்கோள்களை ஏதுக்கள் கூறிச் சாதித்தும், உதாரணங்கள் கூறி வலியுறுத்தியும் நிலை நாட்டினார். இங்ஙனம் முப்பொருள்களில், சத்தாகிய பதியும், அசத்தாகிய பாசமும் ஒன்றனை ஒன்று அறியாது என்று ஏதுக்களினாலும், உதாரணங்களினாலும், துணியப்படவே எஞ்சி நிற்கும் மூன்றாவது பொருளாகிய ஆன்மாவே அவ்விரண்டனையும் அறியுமென்பது பாரிசேட அளவையாற் பெறப்படும். முப்பொருள்களில் எதுவும் எதனாலேயும் அறியப்படாது என்பது பயனொன்றுமில்லாத சூனியமாய் முடியுமாகலான் ஆசிரியர் சூத்திரத்தின் (" இருதிறனறிவுளது இரண்டலாவான்மா " என்னும் ஆன்மாவின் சிறப்பிலக்கணங்கூறும்) மூன்றாவது கூற்றை இவ்வதிகரணத்தில் மேற்கோளாக எடுத்துக்கொண்டு விளக்கிக் கூறத் தொடங்குகின்றார். இதனாலே அதிகரண இயைபு விளங்கும்.

28 " இனி இருதிறனறிவுளது இரண்டலாவான்மா என்பது மேற்கோள். இனி - சூத்திரத்தின் இரண்டு அதிகரணப்பொருள்களையும் கூறியபின், இருதிறன்-சத்து அசத்தென்னும் இரண்டினியல்பையும், அறிவுளது-அறியும் பொருளாயுள்ளது; இரண்டலா-சத்தும் அசத்துமல்லாத; ஆன்மா-சதசத்தாகிய உயிராம். இம் மூன்றாமதிகரணத்தில் சத்தாகிய சிவத்தின் தன்மையையும் அசத்தாகிய உலகத்தின் தன்மையையும் அறியும்பொருளானது சத்துமசத்துமல்லாத சதசத்தாகிய உயிர் என்பது மேற்கோளின் பொருள்.

29. இவ்வதிகரணத்தில் சத்து அசத்து இரண்டனையு மறியும் பொருள் அவ்விரண்டினுக்கும் வேறாய் உண்டோ இல்லையோ என்பது ஐயப்பாடு.

30 இவ்வதிகரணத்திற்கூறிய மேற்கோளுக்கு முன்னே இரண்டு அதிகரணங்களிலும் கூறிய ஏதுக்களோ டும் திருட்டாந்தங்களோடும் கூடிய அனுமான அள வையாலே நிலை நாட்டப்பட்ட மேற்கோள்களே இவ்வதி கரணத்திற்கு ஏதுக்களாக உதவுவன ஆதலின், ஏனைய சூத்திரங்களிற்போல ஏதுவும் உதாரணமும் கூறவேண்டிய அவசியமில்லை. இம்மேற்கோளுக்குமுன்னே இரண்டு அதிகரணங்களாலும் பெறப்படுகின்ற ஏது (1) சத்து அசத்தை அறியாது (2) அசத்துச்சத்தையறியாது என்பது.

தம்முள் ஒன்றினை ஒன்று அறியாத ஞாயிறும் பொரு ளும் கண்ணாலறிந்து அனுபவிக்கப்படுவதுபோலத் தம்முள் ஒன்றனை ஒன்று அறியாத சத்தும் அசத்தும் ஆன்மாவால் றிந்து அனுபவிக்கப்படுமென்பது உதாரணம்.

31. இனி இருதிறனறிவுளதிரண்டலா ஆன்மா; என் னும் மேற்கோளுக்கு முன் முதலதிகரணத்திலும், 2-வது அதிகரணத்திலும் ஏதுக்களும் உதாரணங்களும் கூறிவிட்ட மையால் ஆசிரியர் தாமே இவ்வதிகரணத்தில் அம்மேற் கோளைப் பதச்சேதஞ்செய்து வார்த்திகப்பொழிப்புரை கூறு கின்றார். அதனை ஆசிரியர் பின் வருகிற உரைச்செய்யுள் ஒன்றினாலும், உதாரண வெண்பாக்கள் மூன்றினாலும்விளக் கிக் கூறுகின்றார். உரைச்செய்யுள் என்பது சில்வகை

எழுத்தில் பல்வகைப்பொருளைத்திட்பநுட்பஞ்செறிவுறவைத்துக் கூறப்படும் செய்யுள்போல் கூறப்படும் உரை நடை.

32. உரைச்செய்யுள்.

“இவ்விரண்டினையு மறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன்பாலு முளதாயுள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.”

பதவுரை:- “இவ்விரண்டனையும்-மேலே கூறிய சத்தாகிய சிவத்தையும், அசத்தாகிய காரிய உலகத்தையும்; அறிவதாய் - அறியுந்தன்மையுடைதாயும்; உபதேசியாய்-அறிவிக்க அறியுந் தன்மையுடையதாயும்; இரண்டன்பாலும்-சத்தாகிய சிவத்தின் கண்ணும், அசத்தாகிய உலகத்தின் கண்ணும்; நின்ற-நிலைபெற்ற; அவ்வறிவுளதாய்—அந்த அனுபவ அறிவுள்ளதாய்; உள்ள அதுவே - இவ்வாறுள்ள பொருள்யாதோ அந்தப்பொருளே; அவ்வான்மா என்றது - சத்தும் அசத்துமல்லாத சதசத்தாகிய உயிர் என்றவாறும்.

உள்ளதாயுள்ள அது என்பது, சத்தாகிய சிவத்தைப் போல, என்றும் அநாதி நித்தியமாயிருப்பதாயுள்ள பொருளெதுவோ அது என்று விரித்துக்கூறுக. அவ்வான்மா என்பதிலுள்ள அகரச்சுட்டு மேற்கோளிற் கூறப்பட்ட இரண்டலாவான்மா என்பதிலுள்ள ஆன்மா என்பதாம். இருதிறன் என்ற சொற்றொடரோடு அறிவென்ற சொல்சேர்ந்து ஆகிய தொகை நிலைச் சொற்றொடர், இங்கே இருதிறனையும் அறியும் அறிவென்று இரண்டாம் வேற்றுமைப் பொருளிலும், இருதிறனுல்விளங்கிய அறிவென்று மூன்றும்வேற்றுமை

பொருளிலும் இருதிறனிலும் உள்ள அறிவென்று ஏழாம் வேற்றுமைப்பொருளிலும் விரியும். சத்து அசத்து என்னும் இரண்டனையும் அறிவதாயுள்ள அது என்றதினாலே, இவை இரண்டுக்கும் வேறாய்ச் சத்து அசத்தையறியுமென்று கூறும் சிவாத்துவிதசைவர் கொள்கையும், அசத்துச் சத்தையறியுமென்றுகூறும் சிவசங்கிராந்தவாத சைவர் கொள்கையும் மறுக்கப்பட்டன. உபதேசியாயுள்ள அதுஎன்றதனாலே உயிர் சத்தாகிய சிவத்தினாலே அறிவிக்க வேண்டாது தானாகவே யறியுமென்று கூறும் சிவசமவாதசைவர் கொள்கையும், ஈசுரவிகாரவாதசைவர் கொள்கையும், ஐக்கியவாதசைவர் கொள்கையும் மறுக்கப்பட்டன. இரண்டன்பாலு முளதா யுள்ள அதுவென்றதனால் ஆன்மாவினறிவு சத்தாகிய சிவத்தின் அறிவோடு கூடாமலும், சுட்டறிவும் சுகதுக்க அனுபவமும் அற்று ஆன்மாப் பாடாணம் போற் கிடக்கும் என்று கூறும், பாடாணவாதசைவர் கொள்கையும், ஆன்மா மெய்ஞ் ஞானத்தையடைந்தபொழுது ஆணவமலவலி நசிக்கப் பெற்று முத்தியடையுமென்றும், முத்தியடைதற்குச் சத்தா கிய சிவத்தினுடைய திருவடி கூடவேண்டியதில்லை என்று கூறும் பேதவாதசைவர் கொள்கையும், முத்திநிலையில் ஆன்மாச்சத்தாகிய சிவத்தோடு கூடியவழி அச்சிவத்தோடு ஒன்றாய்ப்போதலேயன்றி அதன்பாலுளதாயதில்லை என்று கூறும் சுத்த சைவர் கொள்கையும் மறுக்கப்பட்டன.

உபதேசியாயுள்ள அது என்றதனாலே ஆகாயத்தின் குண மாகிய ஓசைஅதனை விளக்குவதோர் கருவி உள்ளபொழுது விளங்கியும் இல்லாதபொழுது விளங்காதும் நிற்கும் இயல்பு போல ஆன்மாவின்குணமாகிய அறிவானது அதனை விளக்குவ

தோர் துணைக் கருவி உள்ளபொழுது விளங்கியும் இல்லாத பொழுதுவிளங்காமலுமுள்ள இயல்புடையது. பெர்தநிலையில் ஆன்மாவின் சுட்டறிவு விளங்குதற்கு ஐம்பொறிமனமுதலிய கருவிகள் துணைகளாயுள்ளன. முத்தி நிலையில் ஆன்மாவின் மெய்யறிவு விளங்குதற்கு அருள் துணையாயுள்ளது. இரண்டன்பாலு முளதாய அது என்றதினுலே ஓர்படிகம் எந்தப் பொருளைச் சார்ந்ததோ அதிலழுந்தி அந்தப்பொருளின் தன்மையை அடையும் அதுபோல ஆன்மாவும் எந்தப் பொருளைச் சார்ந்ததோ அங்ஙனம் சார்ந்த பொருளில் அழுந்தி அதன் தன்மையடையும். பெர்தநிலையில்ஆன்மா உலகத்தைச்சார்ந்து அதற்கு வேருய் நின்று அதனைச் சுட்டியறியும் தன்மையுடையது. முத்திநிலையில் ஆன்மாச்சத்தாகிய சிவத்தோடு அத்துவிதமாய்க்கலந்து நின்று அதனிடத்தில் அழுந்தி அறிந்து நின்று பேரின்பம் அடையும் தன்மையுடையது.

இவ்வதிகரணத்தில் இருதிறனையும் அறியும் அறிவுளது எனவே இருதிறனுகிய சத்தும் அசத்தும் எனப்பட்டன வெல்லாம் பிரமேயமாகும்.

பிரமேயப்-அளவையால் அறியப்படும்பொருள்; சத்தையும் அசத்தையும் அறியும் ஆன்மாவே - பிரமாதா, பிரமாதா-அளந்தறிகிறவன்; ஆன்மாவின் அறிவாகிய சிற்சத்தியே பிரமாணம்; பிரமாணம் - அளக்குங்கருவி, அவ்வறிவு நிகழ்ச்சியே பிரமிதி - பிரமிதி - அறிவு. இருதிறனுல் விளங்கும் அறிவுளது எனவே இரண்டனுள் அசத்தினுல் விளங்கும் பொழுது ஆன்மாவுக்கு வேருய் நின்று விளக்குங்காட்சியும் அனுமானமும் ஆகமமும் எனப்படும் அசத்தாகிய பாச

ஞானம் மூன்றும் ஆன்மாத்தனது சிற்சத்தியால் அறிதற்குத் துணையாம். ஆன்மாவுக்குச் சத்தாலறிவு விளங்கும்பொழுது அன்னியமின்றித்தனக்கு ஆதாரமாய்உடன்நின்று விளக்கும் அருளாகிய சிவஞானமே ஆன்மாவுக்குக் கருவியாம். பாச ஞானமும் சிவஞானமும் ஆன்மா அறிதற்குத்துணையாய் நிற்பதால் பிரமாணமென்று உபசரித்துக்கூறப்படும். இருதிறனிலும் அறிவுளது எனவே ஈரிடத்தும் ஆன்மாக்கேடின்றி அசத்தால் விளங்கி அசத்தையறியும் பொழுது அசத்தின் பாலும், சத்தால் விளங்கிச் சத்தையறியும்பொழுது சத்தின் பாலும் அதுவதுவாய் நின்றுளது என்பது பெறப்படும்.

இரண்டலாமையைவிளக்குதற்கு எழுந்த உதாரணம்:-

"அருவுருவந் தானறி தலாயிழையா யான்மா
அருவுருவ மன்றாகு முண்மை - யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றேர்க்கு"

(பதவுரை) ஆய் இழை - நுணுகிய நூல்களை, ஆய் ஆன்மா - ஆராய்வதாகிய உயிரே, அருவுருவம் - சத்து அசத்து என்னும் இரண்டனையும், அறிதல் - அறிவதாகலான் அருவுருவம் - (அது) சத்தும் அசத்தும், அன்று ஆம்-அல்லாமல் அவற்றின் வேறும், உண்மை - ஆன்மாவின் உண்மைத்தன்மை, அருவுருவாய்த்தோன்றி-சத்தும் அசத்தும்

போல விளங்கத் தோன்றி, உடனில்லாது - அவற்றோடு ஒப்ப நிற்பது மன்றாய், தோன்றாது நில்லாது-விளங்காது சூனியமாய் நிற்பது மன்றாய், மலர் மணம்போல் - மலரின் கண்வாசம், அவ்விருவகையுமின்றி அதன் கண் அடங்கித் தோன்றுமாறு போல, தொக்குத் தோன்றல் - (சத்திலும், அசத்திலும் சார்ந்ததன் வண்ணமாய்)அடங்கித்தோன்றுவ தோரியல்பாம், ஆதலான் அஃது அவை போலத்தனித்து அறியப்படுவ தொன்றன்றி அவ்விரண்டனையும் அறியு முகத் தான் அறியப்படுவதாம் என்பது குறிப்பெச்சம்.

சுட்டுணர்வுக்கு விடயமாகாமை பற்றிச் சத்தை அரு வென்றும், அதற்கு விடயமாதல் பற்றிஅசத்தை உருவென் றும் கூறினர். அறிதல் - அறிதலான் என்று ஆன் உரிபு விரித்துரைக்க. இழை - நூல், இது உவமையாகு பெயராய்ச்சாத்திரத்தை உணர்த்தி நின்றது. ஆய்ஆன்மா என்பதில் ஆய்தல் - நுணுகி ஆராய்தல். ஆயிழையெனப் பொருளின் நுணுக்கம் நூலின்மே லேற்றப்பட்டது. ஆயிழை என்பதினாலே ஆன்மாவுக்கு அறியுந்தன்மை யுண்டென்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது. அருவுரு வாய் என்பதில் - ஆய் என்பது உவமப்பொருள் குறித்து நின்றது. தொக்குத்தோன்றல் எனக்கூட்டி உரைக்க.

(கருத்துரை) ஆன்மாச் சத்தையும் அசத்தையுமறிந்து அவ்விரண்டனையுஞ் சார்ந்து அறியுமுகத்தால் தன்னையுமறி வதன்றித், தன்னைத் தனித்தறியமாட்டாது. சத்து அசத்து இரண்டினாலும் அறிந்து உபதேசியாய் நிற்பது ஆன்மா என்பதை விளக்கிக்காட்டும் உதாரணம்:-

" மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசி-லசத்துமலை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

(பதவுரை) *மயக்கமதுற்றும்* (நின்னறிவை விளக்குதற்குரிய துணைக்கருவியில்லாத பொழுது) ஒருவிடயத்தை யின்னதென்று அறியமாட்டாது மயங்கியும், *மருந்தில் தெளிந்தும்* - பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்க நோய்க்கு மருந்தாகிய துணைக்கருவி உள்ள பொழுது அம் மயக்கம் நீங்கி அதனை இன்னதென்று நிச்சயித்தும், *பெயர்த்துணர் நீ* - இங்ஙனம் மாறி மாறி உணர்ந்து வருகின்ற நீ, *பேசில்* - சொல்லுமிடத்து, *சத்தாகாய்*-உலகனைத்தும் ஒருங்கே அறிந்தாங்கறியும் சிவசத்தைப் போல அறியுஞ்சத்தியுடையாயல்லை. *அற்றேல்* - அவ்வாறாயின் (நான் அறியுஞ்சத்தியுடையனல்லனோ எனின்) *நீ அறிந்து செய்வினைகள்* - துணைக்கருவியுள்ள பொழுது நீ முன் அறிந்து செய்த வினைகளை, *நீயன்றி* - நீயே அறிந்து அனுபவிக்க வல்லையன்றி *வேறு அசத்து* - நின்னின் வேறாய் அசத்தாகிய பாசம், *அறிந்து துய்யாமை* - அறிந்து அனுபவிக்க மாட்டாமையால், *அசத்துமலை* - அதைப் போல அசத்தனுவாயுமல்லை (வேறு-சத்தகுணமுடைய ஆகாயம் போலத் துணைக்கருவி உள்ள பொழுது அறியுமாற்றலுடைமையும், அஃதில்லாதபொழுது அவ்வாற்றல் இன்மையுமாகிய இரண்டுமுடைய நீ அவ்விரண்டிற்கும்) வேறாய்ச் சித்தசித்தாந் தன்மையுடையை.

மருந்திற்றெனிந்தெனவே - மயங்குதல் அது இல் வழியென்பது பெறப்படும். துணைக்கருவியில்லாதபொழுது உண்டாவதும், அஃதுள்ளபொழுது நீங்கி நிற்பதுமாகிய மயக்கம், உண்டியில்லாத வழித்தலைப்படுவதும், அஃதுள்வழிநீங்கி நிற்பது மாகிய இயல்புடைய பசியோ டொத்தலின் அதனைப் பசிநோயாகவு ், தீர்த்தலொப்புமை பற்றித் துணைக்கருவியைப் பசி நீக்கும் மருந்தாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. மருந்தெனப்பொதுவாக உருவகஞ்செய்யப்பட்டதாயினும், மறித்து மறித்று வேண்டப்படுமாறு இங்குப் பொருத்தமுடையது பசி நோய் தீர்க்கு மருந்தே ஆதலின், அவ்வாறு உரைக்கப்பட்டது.

மயக்கமது என்பதில் அது-பகுதியில் பொருள்விகுதி. அசத்துத்தான் என்பதில், தான் எழுவாயுருபுபட நின்றது. ஈற்றிலுள்ள தான்-அசை. துவ்வாமை-என்பது துய்யாமை என மரீஇயது அசத்தும் என்பதில் 'உம்'-சத்துமல்லாமல் என்ற பொருள் குறித்தலினலே இறந்ததுதழீஇயிற்று. இவ்வுதாரணம் துணையைக்கொண்டே உயிர் அறியுமெனக் கூறினமையால் பொழிப்புரையில் உபதேசியாய் என்பதை வலியுறுத்தியது.

(கருத்து) கருவிகளோடு கூடிய பொழுது மயங்காமலும் கூடாதவிடத்து மயங்கியும் அறிகின்ற ஆன்மா, எக்காலத்தும்ஒருதன்மைத்தாய் அறியும் இறைவன் போல் சத்துமன்றி, என்றும் அறியமாட்டாத பாசம்போல் அசத்துமன்றி, அறிவு அறியாமை என்னும் இரண்டு தன்மை

களையுமுடைய பொருளாகும். சத்து அசத்து இரண்டன் பாலும் ஆன்மா அதுவதுவாய் நின்று அறியுமென்பதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்:-

"மெஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாதல்
அஞ்ஞான முள்ளமணை தல்காண்- மெஞ்ஞானந்
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுளவாத் தான்"

அஞ்ஞானம் - மேலே கூறிய மயக்கமானது, மெய்ஞ்ஞானந்தன்னில் . ஒரு பெற்றித்தாய அறிவெனப்படும் சிவத்தின் எதிர், அசத்தாதல் - கதிர் முன் இருள் போல நிலைத்து நிற்குந் தன்மையில்லாததாதலின், விளையாது உளதாகாது. மெஞ்ஞானம் தானே உள அன்றே - அச்சிவம் என்று உள்ளது அன்றே, தான் ஏய் உளம் - தான் அஞ்ஞானம் பொருந்துதற்குரிமையுடைய உயிர்கள். உளவா - உள்ளனவாக, அணைதல் - அவ்வுயிர்களைப்பற்றி நிற்றல், தண் கடல் நீர் உப்புப்போல்-குளிர்ச்சி பொருந்திய கடலின்கண் உளலாதலின்றி அக்கடலினிடத்துளதாகிய நீரைப் பற்றி நிற்கும் உப்புப்போல் என்று காண் - அறிவாயாக.

விளையாதென்னும் எதிர் மறை வினையெச்சம் அணைதலென்னும் தொழிற் பெயரைக் கொண்டு முடிந்தது.

மெஞ்ஞானந்தானே என்பதில் 'தானே' என்பது கட்டுரைக்கண் வந்தது. நான்காவது வரியில் தான் முன்னையது எழுவாய். பின்னையது அசை நிலை. ஏயுளம்-வினைத்தொகை.

தண் கடல் உப்புப்போல் என்றதினாலே முப்பொருள் களுள், பதியினுள் பசுவியாப்பியமும்; பசுவினுள் மாயை கன்மங்கள் வியாப்பியமும் ஆகும். பதியினுள் பசு வியாப் பியமும், பதியினுள் ஆணவமலம் வியாப்பியமும், பசுவும் ஆணவமலமும் வியாத்தி; அதாவது சமவியாபகம். பொழிப் புரையிற்கூறிய இரண்டன்பாலு முளதாய் என்றதினாலே ஆன்மாவுக்குச் சத்தினும் அசத்தினும் உள்ள இயைபை இவ்வெண்பாவிளக்கி வலியுறுத்துகின்றது. அஞ்ஞான மென்பது ஆணவ மலத்தின் காரியமாகிய மயக்கத்தைக் குறிக்கிறது. ஞானமின்மை அன்று.

(கருத்துரை) உப்பானது நீர்க்கு இடங்கொடுத்திருக் கும் ஆகாயத்தைப்பற்ருது நீரைப்பற்றி நிற்பது போல் அஞ்ஞானமாகிய மயக்கம் மெஞ்ஞானமே வடிவாகிய இறைவனைப்பற்ருது உயிரை அநாதியே பற்றிநிற்கும் என் பதாம்.

34. இங்ஙனம் இவ்வதிகரணத்தில் மேற்கோளும் அதனை ஆசிரியர் விளக்கும் உரைச்செய்யுளும் மூன்று, வெண்பாக்களும் அடங்கிய வார்த்திகப் பொழிப்புரை, கூறப்பட்டவாறறிக.

ஏழாஞ்சூத்திரம் முடிந்தது.

மா. வெ. நெல்லையப்ப பிள்ளை,
24—7—41.
சிந்துபூந்துறை.

வஸந்தா பிரஸ், மாயவரம்.